பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 09 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- நாட்டில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக அகற்ற மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- தூய்மை இந்தியா ஒரு மாதகால சிறப்பு இயக்கத்தை அடுத்த மாதம் 2-ஆம் தேதி தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை மத்திய அரசு எடுத்து வருகிறது.
- தமிழகத்திற்கு நடப்பு Kharif மற்றும் எதிர்வரும் Rabi பருவத்திற்கான உரத்தை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
- மாநில அரசு பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மத்திய அரசின் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான காலக்கெடு இம்மாதம் 30-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>

நாட்டில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக அகற்ற பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றி அவர், வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருட்களை கடத்தி வருபவர்களை தடுக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் எல்லை கடந்த பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க பாதுகாப்புத்துறையை சேர்ந்த அனைத்து பிரிவுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருட்களின் சில்லரை விற்பனையை தடுப்பது மட்டுமின்றி பெரிய அளவில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க வேண்டியதும் அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பெரிய கடத்தல்காரர்களிடமிருந்து வீதிகளுக்கு போதைப்பொருள் வருவதை புரிந்துகொண்டு அதற்கேற்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

நாடு முழுவதும் 372 மாவட்டங்களில் போதைப்பொருள் தடுப்பு இயக்கங்கள் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

சிறப்பு தூய்மை இந்தியா இயக்கம் அடுத்த மாதம் 2-ஆம் தேதிமுதல் ஒருமாத காலத்திற்கு நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

மத்திய அரசின் பல்வேறு துறைகளும் தனித்தனியாக இந்த இயக்கத்தை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் சிறப்பான நிர்வாகம், வெளிப்படைத்தன்மை, மக்களுக்கு முன்னுரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறையுடன் இந்த தூய்மை இந்தியா இயக்கத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

நிர்வாக மேம்பாட்டின் காரணமாக கோப்புகளின் தேக்கத்தை குறைப்பது உள்ளிட்ட முக்கிய பணிகளை தொழிலாளர் அமைச்சகம் இந்த ஒருமாத காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

<<<<<<>>>>

தமிழகத்திற்கு நடப்பு கரிஃப் மற்றும் எதிர்வரும் ரபி பருவத்திற்கான உரத்தை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய 27 ஆயிரத்து 823 டன் யூரியா, 15 ஆயிரத்து 831 டன் DAP, 98 ஆயிரத்து 623 டன் NPK Complex உரங்களை தமிழகத்திற்கு வழக்குவதற்கு தேவையான அறிவுரையை மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல், ஆகஸ்ட் மாதம் வரையிலான தமிழகத்திற்கான ஒதுக்கீட்டில் இதுவரை 57 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

திருவள்ளூர், திருநெல்வேலி. செங்கல்பட்டு, திருவாரூர் மாவட்டங்களில் நான்கு புதிய தொழிற்பேட்டைகளையும், இரண்டு தனியார் தொழிற்பேட்டைகளையும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பொது வசதி மையம், தொழிலாளர்கள் தங்கும் விடுதி, 18 தொழிற்பேட்டைகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி மேலாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

<<<<<<>>>>

பெண்கள் கல்வி அறிவு பெறவும், அவர்களுக்கான உரிமைகளை நிலைநாட்டவும் மாநில அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வங்கிக்கடன் வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், மாநில அளவில் பொருட்கள் விற்பனையில் இம்மாவட்டம் முதலிடத்தில் உள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>

மாநில அரசின் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் 10, 11, 12-ஆம் வகுப்புகளில் மத்திய அரசின் தகுதி அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இம்மாதம் 30-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் செய்திக்குறிப்பில், தேசிய கல்வி உதவித்தொகைக்கான இணையதளத்தில் மாணவ, மாணவியர் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்யலாம்.

ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

<<<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த வரி குறைப்பால் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கணிசமாக குறையும் என்று ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர்.

(Sound Byte – பொதுமக்கள் – 47 Sec. )

<<<<<<>>>>

பண்டிகைகால பயணியர் கூட்டநெரிசலை தவிர்க்கும் நோக்கில் நாகர்கோவில் – தாம்பரம் இடையே இம்மாதம் 28-ஆம் தேதிமுதல், அடுத்த மாதம் 27-ஆம் தேதிவரை சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

நாகர்கோவிலில் இரவு மணி 11.15-க்கு இந்த ரயில் புறப்படும், மறுமார்க்கத்தில் இம்மாதம் 29-ஆம் தேதி முதல், திங்கட்கிழமைகளில் தாம்பரத்திலிருந்து பிற்பகல் மணி 3.30-க்கு நாகர்கோவில் நோக்கி இந்த சிறப்பு ரயில் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு சிறப்பு ரயில் சென்னை சென்ட்ரலில் இருந்து சேலம் – கோயம்புத்தூர் வழியாக போதனூருக்கு இம்மாதம் 25-ஆம் தேதி முதல் வியாழக்கிழமைகளில் இயக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் போதனூரிருந்து வெள்ளிக்கிழமைகளில் இந்த சிறப்பு ரயில் மாலை மணி 6.30-க்கு புறப்படுகிறது.

சென்னை எழும்பூர் – திருநெல்வேலி இடையேயான வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயிலில் இம்மாதம் 24-ஆம் தேதிமுதல் கூடுதலாக நான்கு பெட்டிகள் இணைக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 40 Sec.)

<<<<<<>>>>

## மாவட்டச் செய்திகள்

உதகமண்டலத்தில் தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி உருது உயர்நிலைப்பள்ளியை மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று திறந்துவைத்தார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 60 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக்கடன் உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

-------------------

விழுப்புரத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தடகள போட்டியில் வெற்றிபெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு காவல்துறை கண்காணிப்பாளர் திரு சரவணன் பரிசுகளை வழங்கினார்.

-----------

திருவள்ளூர் மாவட்டத்தில் ''நில் கவனி நேசி'' என்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த குறும்படத்தை ஆவடி மாநகர காவல் ஆணையர் திரு சங்கர் வெளியிட்டார்.

<<<<<<>>>>

## விளையாட்டுச் செய்திகள்

குர்கிராமில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Mahika Khanna – Sohini Sanjay இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 6-1 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Aakruti Narayan – Sahira Singh இணையை வென்றது.

மற்றொரு மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Diva Bhatia – Sai Samhitha இணை காலிறுதிக்கு முன்னேறியது.

<<<<<<END>>>>